அவர்கள் எவ்வளவு பெரிய செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும் நிச்சயமாக அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்து கொள்ள விரும்புவது அதில் இருக்கும் நிர்வாக இயக்குநர்கள் யார் யார்? அவர்கள் சாதாரண சாமான்ய மானவர்களாக இல்லாமல் மிகுந்த செல்வாக்கு உள்ள காரணத்தினால் அது துறை விசாரணையாக இருந்தாலும் நீதி மன்ற விசாரணையாக இருந்தாலும் அவர்கள் உள்ளே புகுந்து வெளியே வந்து விடுகிற நிலைமை இருக்கிறது. இதையும் மீறி அரசு எந்த வகையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே இப்போது கஸ்தூரிரங்கன் என்பவர் தலைவராக இருக்கிறார். மற்றும் 5 பேர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும, எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி தருகிறேன்.

கொல்லிமலைப் பகுதி மலைவாழ் மக்களுக்குக் கதர் வாரியத்தின் மூலம் வழங்கப்படும் கடன்கள்

303—(*வினா எண். 21746)—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலைப் பகுதியில் மலைவாழ் மக்களுக்காகக் கதர் வாரியத்தின் மூலம் என்னென்ன கடன்கள் வழங்கப்படுகின்றன ?

(ஆ) கடன் வழங்குவதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழும் மற்றும் தமிழ்நாடு அரசின் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் கடன் உதவியும் மானிய உதவியும் வழங்கப்படுகின்றது.

(ஆ) வாரியம் தனிப்பட்ட நபர்களுக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் (Agreed Programm) கடன் வழங்குகிறது. இதன் பொருட்டு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலித்து கடன் பத்திரம் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

1984 மார்ச் 13]

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கும்போது, வங்கிகள் கடன் கொடுப்பதற்காக, ஜாமீன் பெறுவது போன்ற சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இக்காரணங்களால் கடன் வழங்குவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்றாலும் கடன் வழங்குவதில் ஏற்படும் தாமதங்களை தவிர்க்க, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் 1982-83ல் மற்றும் 1983–84 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு தொகை கடனாகக் கொடுக்கப்பட்டது ? அதில் எவ்வளவு தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் 1982–83 ஆம் ஆண்டில் 39 நபர்களுக்கு பல்வேறு தொழில்களுக்கு நிதி உதவி ரூ. 49,450 வழங்கப்பட்டுள்ளது. இதில் கடன் ரூ. 33,200-ம் மற்றும் மானியம் ரூ. 16,250-ம் ஆகும்.

1983–84 ஆம் ஆண்டிற்கு 44 நபர்களுக்கு பல்வேறு தொழில்களுக்கு ரூ. 77,550 வழங்கப்பட்டுள்ளது. இதில் கடன் தொகையாக ரூ. 51,000 மற்றும் மானியம் ரூ. 26,550 வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1982–83 ஆம் ஆண்டில் 40 நபர்களுக்கு தேன் கூடுகளை ரூ. 68,000 செலவினத்தில் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 50 விழுக்காடு மானியமாகவும், 50 விழுக்காடு கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 1983–84 ஆம் ஆண்டில் 50 நபர்களுக்கு 500 தேன் கூடுகளை ரூ. 1.00 இலட்சம் செலவினத்தில் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் 50 விழுக்காடு மானியமாகவும், 50 விழுக்காடு கடனாகவும் வழங்கப்படும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கடன்கள் வழங்குகின்ற நேரத்தில் மலை வாழ் மக்களுக்கு கூட்டுறவு லேம்பு சங்கத்தின் மூலமாகவும் நில அடமான சங்கத்தின் மூலமும் வேறு கடன்கள் வழங்கப்பட்டு அவர்கள் கடன் பெற்று இருக்கிறார்கள். ஆனால் இந்தக் கடன்கள் வழங்குகின்ற நேரத்திலே இந்தக் கடன்கள் வாங்கப்படாதவர்கள் ஒரு சிலர் இருக்கிறார்களே தவிர இதில் ஜாமீன் பெற்றவர்களுக்கு மட்டும் கடன் வழங்க முடியாத நிலை இருக்கிறது.

(முற்பகல் 10-00)

இந்த விதிமுறைகள் இருப்பதால் அவர்களுக்குக் கடன் வழங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த விதிமுறைகளை மாற்றியமைத்து அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயற்படும் திட்டங்களுக்குக் கொடுக்கப்படும் நிதியுதவியைப் பெறும்பொழுது கால தாமதம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறினார்கள். அப்பொழுது ஏற்படுகின்ற காலதாமதத்திற்கு ஒரு சில காரணங்கள் இருக்கின்றன. அதாவது, லாம்ப் கூட்டுறவு சங்கத்தில் கடன் இல்லை என்ற அத்தாட்சி பெற வேண்டும். ஜாமீன்தாரருக்கு எந்தக் கடனும் இருக்கக் கூடாது ; ஒரு நபர், ஒரு கடன் பெறுபவருக்கு மேல் ஜாமீன்தார்ராக இருக்கக் கூடாது ; விண்ணப்பதாரர் குடும்பத்தில் யாருக்காவது வங்கியில் கடன் இருந்தால் இவருக்குக் கடன் கிடையாது ; கடன் பெறுவோர் ஒருவருக்கொருவர் ஜாமீன்தாரராக இருக்கக் கூடாது ; வங்கியின் அருகாமையில் இருப்பவர்களும், வங்கிக்கு அறிமுகமானவர்களும் ஜாமீன்தாரர்களாக இருக்க வேண்டும் ; மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நிதியுதவி பெறும் நபர்கள் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. ஆவணங்கள் பெறப்பட்டவுடன் நிதியுதவி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடன்குடி பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம்

304—(*வினா எண். 21811)—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் லாபத்தில் இயங்குகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?